# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## AS.No.62/2000

DW2–முகமதுஅலி நாள்.17.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தானது வாலிகண்டபுரம் கிராமத்தில் சர்வேஎண்.315/2ல் 2ஏக்கர் 3செண்டும், மற்றும் சர்வேஎண்.315/3ல் 69செண்ட் என்றால் சரிதான். ஏற்கனவே தாவாசொத்து பதிவு எண்.TD1325ல் இருந்தது என்றால் சரிதான். பின்னிட்டு அது 176என்று மாறுதல் ஆனது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14ன் படி 22.05.1986ம் தேதி வக்பு போர்டு கண்காணிப்பாளர் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக 17.12.1985ம் தேதி 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்படவில்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் நான் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் தாவாசொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், அது வக்பு போர்டுக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்துள்ளேன் என்று கூறியுள்ளேன். எதிர்வழக்குரையில் வக்பு போர்டு கண்காணிப்பாளரை தரப்பினராக சேர்க்கவேண்டுமென்று கோரிக்கை வைக்கவில்லை. 6ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வக்பு போர்டு செயலாளரை தரப்பினராக சேர்க்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தார் என்றால் சரிதான். அதன்பின்னர் அவரை தரப்பினராக சேர்க்க வாதிதரப்பில் மனு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக வக்புபோர்டு கண்காணிப்பாளர் மற்றும் செயலாளர் ஆகியோர்கள் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 2 மாத கால அவகாசத்திற்கான அறிவிப்பு கொடுக்கவில்லை என்று 6, 7 பிரதிவாதிகள் கட்சி செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும், இறந்துபோன 1, 3 முதல் 5 பிரதிவாதிகளின் வாரிசுகளும் தாவா சொத்துகள் வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், அது வக்பு போர்டுக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறோம். கருப்பாயின் மீது

வக்புபோர்டு தாக்கல் செய்த அ.வ.எண்.404/1973 வழக்கில் இந்த வாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 1970ம் ஆண்டு கருப்பாயி பெயருக்கு பட்டா கொடுக்கபட்ட பின்னர் தான் 1973ம்ஆண்டு தான் வக்புபோர்டு வழக்கு தாக்கல் செய்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.404/1973ன் பிராது நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.404/1973ல் இனாம் ஒழிப்பு சட்டம் வந்தபின்னர் கருப்பாயி பெயருக்கு வந்த பட்டா செல்லாது என்று வக்புபோர்டு கட்சி செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. கருப்பாயி இறந்த தேதி எனக்கு தெரியாது. அ.வ.எண்.404/1973ல் தீர்ப்பு தேதியில் கருப்பாயி அம்மாள் உயிரோடு இருந்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. கருப்பாயிஅம்மாளின் மகன் பெயர் கண்ணையன் ஆசாரி ஆவார். வா.சா.ஆ.55ன் படி மேற்படி கண்ணையன் ஆசாரியை விசாரித்துதான் தாசில்தார் பட்டா வழங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.404/1973ல் ஒருதலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. குலாம்உசைன் சாகிப் மற்றும் நன்னி அல்லா பக்சித் ஆகியோர்கள் கண்ணையக்கு 16.06.1960ல் பி.சா.ஆ.9 மூலம் தாவா 2வது அயிட்ட சொத்தை கிரயம் கொடுத்தாக பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன்பின்னர் 1, 2 அயிட்ட சொத்துக்களை கருப்பாயி மற்றும் கண்ணையன் ஆகியோர்கள் மாரிமுத்துவின் மகன் ரெங்கநாதனுக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவாசொத்துகளுக்கு வக்புபோர்டு பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வருவாய் துறை ஆவணங்களை தங்கள் பெயருக்கு மாற்றிகொடுக்கவேண்டுமென்று வக்புபோர்டு கோரிக்கை வைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து வக்புபோர்டு கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. 1, 2 அயிட்ட சொத்துக்கள் வக்புபோர்டுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட Profoma உள்ளது. வக்புபோர்டு பெயரில் Tittle Deed கிடையாது என்றால்சரியல்ல. 1913ம் ஆண்டு முதல் தற்போது வரை தாவா சொத்து தனிநபர்களின் அனுபவத்தில் இருப்பதாக வருவாய் துறை

ஆணவங்களில் பதிவு உள்ளது என்றால் சரிதான். 1913ம் ஆண்டில் ஒரு ஈட்டுகடன் வைக்கப்பட்டது. பொதுவாக கிரயம் வாங்கிய சொத்திற்கும் மற்றும் பூர்விக சொத்தில் அனுபவம் இருக்கும்போது அனுபவதாரார் பெயரில் பட்டா வழங்கப்படும் என்றால் சரியல்ல. கிரய பத்திரம் இருந்தால் பட்டா கொடுப்பார்கள். வழக்கிற்காக மேற்படி விவரத்தை நான் மறுக்கிறேன் என்றால்சரியல்ல. கருப்பாயி இல்லாமல் வாங்கிய தீர்ப்பு Paper Delivery என்று விசாரணை நீதிமன்றத்தில் முடிவாகியுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.55ஆவணத்தில் கோபுர முத்திரை இல்லை என்தற்காக அதன் உண்மை தன்மையை மறுக்கமுடியாது என்றும் ஏற்கனவே நீதிமன்றத்தில் 2002ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாசொத்துக்களை பொறுத்து நான் வம்பு செய்ததால் தான் என்னை கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால்சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் சொன்னதின் அடிப்படையில் தான் வக்புபோர்டு கட்சியாக சேர்க்கப்பட்டது என்றும், தற்போது வழக்கிற்காக அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கும் அவருடைய முன்பாத்தியஸ்தர்களும் அனுபவபாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றால்சரியல்ல. நான் தேவையற்ற கட்சிகாரர் என்று கூறுவதற்கு முரண்தடை தோஷத்தால் தடைசெய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இனாம் ஒழிப்பு சட்டத்திற்கு பின்னர் பட்டா கொடுத்தது தவறு என்று வக்புபோர்டு மேல்முறையீடு எதுவும் செய்திருப்பதாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போது வக்புபோர்டு உறுப்பினர் அல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.